செய்தி வெளியீடு எண் : 10 நாள் :12.10.2020

**தேனி மாவட்டம்**

**உலக சுற்றுலா தினம் 2020 -ஐ முன்னிட்டு இணைய வழி மூலமாக நடத்தப்பட்ட போட்களில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்:-**

*******

ஆண்டுதோறும் உலகம் முழுவதும் செப்டம்பர் 27ம் நாள் உலக சுற்றுலா தினமாக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை சார்பில் தமிழகம் முழுவதும் உலக சுற்றுலா தினம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தேனி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, இவ்வாண்டு சுற்றுலாத்துறை சார்பில் உலக சுற்றுலா தினம் 2020 போடிநாயக்கனூர் CPA கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவ/மாணவியர் ஆகியோரைக் கொண்டு இணைய வழி மூலம் கடந்த மாதம் இறுதியில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

உலக சுற்றுலா தினம் இவ்வாண்டின் கருப்பொருளான "சுற்றுலாவும் - கிராமப்புற வளர்ச்சியும்" என்ற தலைப்பில் போடிநாயக்கனூர் CPA கல்லூரி மாணவ/மாணவியர்களுக்கு இணையவழி மூலமாக கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி மற்றும் கருத்தரங்கம் ஆகியவை நடத்தப்பட்டது.

மேற்கண்டபடி போட்டிகளில் இணையவழி மூலமாக கலந்து கொண்டு, முதல் மூன்று இடங்களை பிடித்த 7 மாணவ / மாணவியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை இன்றைய தினம் (12.10.2020) மாவட்ட ஆட்சியரகத்தில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுலா அலுவலர் தி.உமாதேவி, உதவி சுற்றுலா அலுவலர் ஈ.பாஸ்கரன் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**